தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 287/பேரூ/2023
நாள் 14.11.2023

திரு.AR.சீனிவாசன்,
திசையன்விளை,
திருநெல்வேலி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை, அற்புதவிநாயகர் தெரு, கதவு எண்.2/45 என்ற முகவரியில் வசிக்கும் திரு.AR.சீனிவாசன் என்பவரின் 07.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.09.2023 அன்று பெறப்பட்டு 287/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை, அற்புதவிநாயகர் தெரு, கதவு எண்.2/45 என்ற முகவரியில் வசிக்கும் திரு.AR.சீனிவாசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"திசையன்விளை கிராமம் புல எண்.16/2A2 கொண்ட நிலத்தினை திசையன்விளையைச் சார்ந்த திரு.பால்சாமி என்பவரின் மகன் திரு.சுதாகர் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு நடைபெற்றது. ஆக்கிரமிப்புகளை காலி செய்ய மதுரை உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலபரப்பை அகற்ற அரசு அதிகாரிகளான திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர், திசையன்விளை வட்டாட்சியர் (பொறுப்பு) ஆகியோர் திரு. சுதாகர் என்பவருடன் தொடர்பில் இருந்து கொண்டு நீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் கடந்த 8 மாதங்களாக செயல்பாடு இன்றி கிடப்பில் போடப்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் மீது துறைரீதியான விசாரணை செய்து ஆக்கிரமிப்பை காலி செய்ய கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.09.2023 நாளிட்ட கடிதம் மூலம் திசையன்விளை சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் 05.10.2023 நாளிட்ட தனது அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திசையன்விளை பேரூராட்சியில் உரிய அனுமதியற்ற விதி மீறல் கட்டடமான ஹைதராபாத் பிரியாணி கடையை உரிய விதிகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்காணும் இடத்தை தல ஆய்வு செய்யப்பட்டதில் அற்புத விநாயகர் கோவில் தெருவில் ரோட்டின் முன் தோராயமாக 9 அடி அகலம் 45 அடி நிலம் கொண்ட மொத்தம் 405 ச.அடி கொண்ட காங்கிரீட் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டடம் சர்வே எண்.16/2எ2–ல் உள்ள மொத்த இடத்தில் ஏற்கனவே இவ்விடத்தில் உள்ள கிணற்றை மூடி அதில் பாதி பகுதியில் நல்ல உறுதியான சிமெண்டிலான கட்டடம் கட்டி பிரியாணி கடை நடத்தி வருவதை குறித்து திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலரால் அனுமதியற்ற கட்டுமானத்தை இடித்து அப்புறப்படுத்தவும் அல்லது கட்டட வளாகத்தினை பூட்டி சீல் வைத்தல் தொடர்பாக 15 நாள் காலஅவகாசம் கொண்ட அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. மேலும் இரண்டாவது அறிவிப்பு சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளருக்கு வழங்கப்பட்டு சீல் வைப்பது தொடர்பாக 30 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் சேரன்மகாதேவி உதவி ஆட்சியரால் 27.12.2022 அன்று நடத்தப்பட்ட ஆக்கிரமிப்பு தொடர்பான கண்காணிப்புக்குழு கூட்டத்தில் ஆக்கிரமிப்பு அகற்றிட அறிவுரைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57–ன்படி புகாருக்குள்ளான கட்டடத்தை 04.01.2023 அன்று திசையன்விளை வட்டாட்சியர், காவல் ஆய்வாளர், சுகாதார ஆய்வாளர், திசையன்விளை பேரூராட்சி பணியாளர்கள் முன்னிலையில் பிற்பகல் 3.00 மணியளவில் கடையை பூட்டி சீல் வைக்கப்பட்டது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலரும், திருநெல்வேலி முகாமில் 06.10.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.AR.சீனிவாசன் 06.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி சர்வே எண் 16/2A2 என்கின்ற இடத்தில் அமைந்துள்ள எனது இடத்தை திரு சுதாகர் என்பவர் ஆக்கிரமித்து அங்குள்ள கிணற்றின் மீது உணவகம் ஒன்றை கட்டி நடத்தி வந்தார். இது தொடர்பாக மதுரை உயர் நீதிமன்றத்தில் என்னால் வழக்கு தொடரப்பட்டு, 23.1.2023 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவ்வாணையில் மேற்கண்ட எனது இடத்தில் கட்டப்பட்டுள்ள உணவகத்தை இடித்திட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால், மேற்கண்ட எனது இடத்தில் அமைந்துள்ள உணவகத்தை நீதிமன்ற உத்தரவின்படி இன்னும் இடிக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட 23.1.2023 நாளிட்ட

உத்தரவில் கண்டுள்ளபடி மேற்கண்ட உணவகத்தை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் 06.10.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கன்னியாகுமரி மாவட்டம் திசையன்விளை பேரூராட்சியில் அனுமதியற்ற கட்டடம் தொடர்பாக மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட புகார் மனுவையொட்டி தல ஆய்வு செய்யப்பட்டது. சர்வே எண் 16/2எ2ல் இடத்தில் இருந்த கிணற்றை மூடி அதில் ஒரு பகுதியை மூடிவிட்டு, அதன் மேல் கட்டடம் கட்டப்பட்டு ஐதராபாத் பிரியாணி கடை என்கின்ற உணவகம் நடத்தப்பட்டு வந்தது. அனுமதியின்றி கட்டப்பட்டு நடைபெற்று வந்த உணவகத்தை மூடி சீல் வைத்திட அறிவிப்புக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட கட்டட உரிமையாளருக்கு மேற்கண்ட உணவகக் கட்டடத்தை சீல் வைப்பது தொடர்பாக 30 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. ஆக்கிரமிப்பு தொடர்பாக 27.12.2022 அன்று நடைபெற்ற சேரன்மாதேவி உதவி ஆட்சியர் ஆய்வுக் கூட்டத்தில் ஆக்கிரமிப்பை அகற்றிட அறிவுறுத்தப்பட்ட நிலையில், கடந்த 4.1.2023 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திசையின்விளை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை என்கிற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு.AR.சீனிவாசன் என்பவர் தனது 07.09.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.16/2A2 கொண்ட தனது இடத்தில் திரு. சுதாகர் என்பவர் மேற்படி நிலத்தினை ஆக்கிரமித்து கிணற்றின் மீது முறைகேடாக விதிமீறி உணவகத்தை நடத்தி வருவதாக புகாராக தெரிவித்து அதனை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராகத் தெரிவித்து புல எண்.16/2A2ல் அமைந்துள்ள ஐதராபாத் பிரியாணி கடை என்கிற கட்டடம் திரு. சுதாகர் என்பவரால் அனுமதியின்றி கட்டடப்பட்டதைத் தொடர்ந்து திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் உரிய அறிவிப்பினை வழங்கி, அக்கட்டடத்தை கடந்த 4.1.2023 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் மனுதாரர் திரு. AR.சீனிவாசன் என்பவர் மேற்காணும் புல எண்.16/2A2ல் 11 செண்ட் பரப்பளவு கொண்ட இடத்தில் முறைகேடாக ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட உணவகத்தை அகற்றிடக்கோரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடரப்பட்டு (W.P(MD)No. 1164 of 2023) 23.01.2023 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் ஒரு வாய்ப்பினை அளித்து மேற்காணும் ஆக்கிரமிப்பு உணவகக் கட்டடத்தை 12 வாரக் காலத்திற்குள் அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்காணும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழங்கிய தீர்ப்புரையை திசையன்விளை பேரூராட்சியால் செயல்படுத்தப்படவில்லை என்பதால், மனுதாரர் திரு. AR. சீனிவாசன், என்பவர் மாண்பமை சென்னை நீதிமன்ற மதுரைக் கிளையில் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டு வழக்கு நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ளது என திசையன்விளை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிலையில், மனுதாரர் திரு. AR. சீனிவாசன், என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ள புகார் தொடர்பான பொருட்பாடு குறித்து, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், நீதிமன்றங்களின் நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும், 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 10(3)(b)–ன்படி இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்ய இயலாது என்பதால் இந்நேர்வு தொடர்பான நடவடிக்கையினை இத்துடன் முடித்துக் கொள்ள இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14– ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.AR.சீனிவாசன்,
கதவு எண்.2/45, அற்புதவிநாயகர் கோவில் தெரு,
திசையன்விளை, திருநெல்வேலி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
திசையின்விளை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம் .

3) பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
16.11.2023